1981 மார்ச் 30]

(ஆ) ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையால் விவசாயப் பயிர்கள் பாதிப்பு.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, ''இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றியுள்ள பகுதியிலுள்ள விவசாயப்பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் பொதுத் துறையில் ரூ. 7.48 கோடி முதலீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு சிமெண்டு ஆலையை நிறுவியுள்ளது. இந்த சிமிண்டு ஆலையில் ஈரத் தயாரிப்பு முறையில் சிமிண்டு உற்பத்தி செய்யும் இரண்டு சூளைகள் உள்ளன. ஒவ்வொரு சூளையும் நாளொன்றுக்கு 600 டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. முதல்சூளை 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும், இரண்டாவது சூளை 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும் உற்பத்தியைத் துவங்கியது.

2. சிமிண்டு தூசி வெளியேறுவதை ஓரளவு தடுக்கும் நோக்கத்தில் இரண்டு சூளைகளுக்கும் புகை போக்கி போதிய அளவு உயரமுள்ளதாக இருக்கிறது. இம்முறையானது மின்சாரத் தூசிப் படிவுத்தடுப்பு இயந்திரத்தை நிறுவும் முறையுடன் ஒப்பிடும் போது, பயன்தரத் தக்கதாக இல்லை. எனவே, ஆலங்குளம் சிமிண்டு ஆலையிலிருந்து வெளிப்படும் சிமிண்டு தூசி அதிக பட்சம் தடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சூளைகளுக்கு மின்சாரத் தூசிப்படிவத் தடுப்பு இயந்திரங்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

3. ஆலங்குளம் சிமிண்டு ஆலையை நவீனப் படுத்துதல் மற்றும் சீர்திருத்தப் பணிகள் திட்டத்தை ரூ. 301 இலட்சம் திட்டச் செலவில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் செயல் படுத்தி வருகிறது. மேற் கண்ட திட்டத்தின் கீழ் சூளைகளுக்கும், சிமிண்டு மில்லுக்கும் சேர்த்து மின்சாரத் தூசிப் படிவத் தடுப்பு இயந்திரங்களை நிறுவும் பணியும் மற்றும் சில சீர்திருத்தப்பணிகளும் நடை பெற்று வருகின்றன.

4. மேற் கண்ட திட்டம், இரண்டு கட்டங்களில் அதாவது இயந்திர தளவாடங்கள் விநியோகம் மற்றும் கட்டுமான வரை படங்கள் விநியோகம் செய்யப்படும் அடிப்படையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் சில இயந்திரங்களைச் சீரமைத்தல் மற்றும் சிமிண்டு மில்லுக்கு மின்சாரத் தூசிப் படிவுத் தடுப்பு இயந்திரம் நிறுவுதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் கட்டத்தில் 80 சதவிகிதம் வேலை முடிந்து விட்டது. எஞ்சியுள்ள பணிகள் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. இரண்டாவது கட்டமாக சூளைகளுக்கு மின்சாரத் தூசிப் படிவுத் தடுப்பு இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் ஆலையில் உள்ள சில இயந்திரங்களை நவீனப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்படும். இரண்டாவது கட்டப் பணிகளுக்கான தளவாடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. கட்டுமானப் பணிகள் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கப் பெற்று 1981 ஆம் ஆண்டு ஜூன் ஜுலை திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரத் தூசிப் படிவத் தடுப்பு இயந்திரங்களை நிறுவும் பணி 1981 ஏப்ரல் திங்களில் தொடங்கப் பெற்று 1981 அக்டோபர் திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் மின்சாரத் தூசிப் படிவத் தடுப்பு இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் சீர் திருத்தப் பணிகள் மேற் கொள்ளுதல் ஆகிய திட்டங்கள் அனைத்தும் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முடிவுறும். இதனால் சிமிண்டு தூசி வெளிப்படுவது அதிக பட்சம் கட்டுப்படுத்தப்படும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையை கடந்த இரண்டாண்டு காலத்திற்கு முன்பே இந்த அவையிலே எழுப்பினேன். ஆனால் இன்று வரையில்

1981 மார்ச் 30] [திரு. செ. சிவசாமி]

இது செயல் படுத்தப்பட வில்லை. இந்தப் புகையின் காரண மாக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பயிர்கள் அத்தனை யும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல இந்த புகை பூக்களை பாதிக்கின்ற காரணத்தால் காய்கள் ஏற்படக் கூடிய காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தப் புகையானது பூக்களின் மேல் படுவதால் மகரந்த சேர்க்கை ஏற்படாமல் பயிர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே பலன் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியும் இன்று வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் அங்கே இருக்கின்ற தனியார் தொழிற்சாலைகளிலே இந்தப் புகை வேறு விதமாக வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் தனது சொந்த ஆலையிலே இப்படி புகை பயிர் களைப் பாதிக்கின்ற அளவுக்கு வெளியேறாமல் வேறு வகையிலே வெளியேறுவதற்கு விரைவிலே ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்கான பணிகள் துவங்கப் பட்டிருக்கின்றன. ரூபாய் 3 கோடி அளவிலே நவீனப்படுத்தும் சீர்திருத்தப்பணிகளை செய்ய விருக் கிறோம். அதற்கான ஆரம்ப காலப் பணிகள் துவங்கப்பட் டிருக்கின்றன. எஞ்சியுள்ள பணிகள் 1981, ஜுன் திங்களுக்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பணிகளிலேயே, மின்சார தூசி படிவதை போக்குவதற்கான பணியும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. இந்தப் பணிகள் முழுவதுமாக முடிவடையும் போது, இந்தப் பிரச்சினைகள் தீர்வு அடையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

7. வரவு-செலவுத் திட்டம் 1981–82—பொது விவாதம் (தொடர்ச்சி.)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையின் மீது இங்கே ஆற்றிய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். சில நல்ல திட்டங்களை அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார் கள். அதன் காரணமாக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பல திட்டங்களை இங்கே குறிப்பிட்டிருக்கி றார்கள். அவைகள் நல்ல திட்டங்களாக இருந்தாலும் கூட, அவைகளை விரைவில் காலதாமதம் இல்லாமல் அவர்கள் நிறை வேற்றுவார்களேயானால், அதனால் ஏற்படக் கூடிய பலன்கள்